

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சுகாதார மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், புதுப்பட்டி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாமினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா தலைமையில் 13.09.2025 அன்று துவக்கி வைத்து, பார்வையிட்டு, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, அறந்தாங்கி மாவட்ட சுகாதார அலுவலர் மரு.விஜயகுமார், மாவட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் கண்காணிப்பு குழு உறுப்பினர் எம்.பரமசிவம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், மாநகரம் வீரப்பன்சத்திரம் பகுதி 13 வது வட்டம் அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வே. செல்வராஜ், 1வது மண்டல குழு தலைவர் ப.க.பழனிசாமி, பகுதி கழக செயலாளர் வி.சி.நடராஜன் , 13வது மாமன்ற உறுப்பினர் முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தந்தை பெரியார் 147-வது பிறந்த நாளை முன்னிட்டு

# அரியலூர் மாவட்டத்தில் சமூக நீதி நாள் உறுதிமொழி!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் ஏற்கப்பட்டது!

அரியலூர்,செப், 20-

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 147வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் உறுதிமொழி வாசிக்க சமூக நீதி நாள் உறுதி மொழி ஏற்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

உறுதி மொழி ஏற்கும் நிகழ்ச்சியில், சமூக நீதி நாள் உறுதிமொழியான "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியையும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியையும் எனது வாழ்வியல் வழிமுறைகளாகக் கடைப்பிடிப்பேன். சுயமரியதை ஆளுமைத்திறனும், பகுத்தறிவுப் பார்வையும் கொண்டவையாக என்னுடைய செயல்பாடுகள் அமையும். சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை ஒப்படைத்துக் கொள்வேன். மானுடத்தின் மீது பற்றையும் மனிதாபிமானத்தையும் என்றும் போற்றுவேன். சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைத்திட இந்த நாளில் உறுதியேற்கிறேன்" என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வாசிக்க அனைத்து துறை அரசு அலுவலர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட நிலை அலுவலர்கள் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்!'

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்புக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி. செப். 20-

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி தெற்கு மாவட்டத்தில் தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காக்க கழக தலைவர் அவர்கள் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு முழுவதும் 68,000க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பத்தால் முன்மொழியப்பட்டுள்ள

"தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்" என்ற தீர்மான ஏற்பு கூட்டம் திருச்சி தெற்கு மாவட்டத்தில், இன்று (செப்டம்பர் 20ஆம் தேதி சனிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு திருச்சி பாலக்கரை ரவுண்டானா (மாட்டு ஆஸ்பத்திரி அருகில்) கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றார் .

இந்தநிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தலைமை - நா.தினேஷ்குமார், வரவேற்புரை - திருப்பூர் ஈ.தங்கராஜ்

# திருப்பூர் வடக்கு மாநகர கழக அலுவலக திறப்பு விழா!

## ஆர்.எஸ்.பாரதி - வி.செந்தில் பாலாஜி - மு.பெ.சாமிநாதன் - க.செல்வராஜ் - என்.கயல்விழி செல்வராஜ் - இல.பத்மநாபன் பங்கேற்பு!

திருப்பூர், செப். 20–

திருப்பூர் வடக்கு மாநகர கழக அலுவலக திறப்பு விழா வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், மாநகராட்சி மேயர், ந.தினேஷ்குமார் தலைமையில், வடக்கு மாநகர கழக பொறுப்பாளர் திருப்பூர் ஈ.தங்கராஜ் வரவேற்புரையில் நடைபெற உள்ளது. இதில் கழக அமைப்புச் செயலாளர், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி, கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கரூர் மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல. பத்மநாபன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

திருப்பூர் வடக்கு மாநகர திராவிட முன்னேற்றக் கழக அலுவலக திறப்பு விழா இன்று (20.09.2025 – சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் திருப்பூர், போயம்பாளையம், பெருமாநல்லூர் சாலை, சரண் மருத்துவமனை அருகில் திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், மாநகராட்சி மேயர், ந.தினேஷ்குமார் தலைமையில், வடக்கு மாநகர கழக பொறுப்பாளர் திருப்பூர் ஈ.தங்கராஜ் வரவேற்புரையில் பாண்டியன் நகர் பகுதி கழக செயலாளர் வெ.ஜோதி, தலைமை செயற்குழு உறுப்பினர் ப.குணராஜ், மாநகர பொருளாளர் எ.சரவணக்குமார், துணைச் செயலாளர்கள் தேவி முருகேசன், வி.செங்குட்டுவன், 7வது வட்டக் கழக செயலாளர் செல்வராஜ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணைத் தலைவர் வி.வி.ஜி. காந்தி, வேலம்பாளையம் பகுதி கழக செயலாளர் கொ.ராமதாஸ், அண்ணா குடியிருப்பு பகுதி கழக செயலாளர் மின்னல் அ.நாகராஜ், கொங்குநகர் பகுதி கழக செயலாளர் போலார் ஆர்.சம்பத்குமார், வடக்கு ஒன்றிய கழக செயலாளர் நா.விஸ்வநாதன், மாநகராட்சி 2ம் மண்டலத் தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், 1ம் மண்டலத் தலைவர் வெ.உமா மகேஸ்வரி, மாமன்ற உறுப்பினர் வேலம்மாள் காந்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி மாநகர திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தை திறந்து வைக்கிறார். கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கரூர் மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கழக கொடியேற்றி வைக்கிறார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் மேயர் சிட்டிபாபு கூட்ட அரங்கம் திறந்து வைக்கிறார், திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ் மாநகர பொறுப்பாளர் அறையை திறந்து வைக்கிறார், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், என்.கயல்விழி செல்வராஜ் குத்து விளக்கு ஏற்றி வைக்கிறார், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் திருவள்ளுவர் படத்தை திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்வில் திருப்பூர் வடக்கு மாநகர கழகத்திற்குட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# 800 சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் - நல உதவிகள்!

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா.எம்.பி. – அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினர்!

பெரம்பலூர்,செப்,20-

பெரம்பலூர் மாவட்டத்தில், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, முத்துகிருஷ்ணா மக்கள் மன்றத்தில் நடைபெற்றது.

ஆ.இராசா.எம்.பி., பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர்கள் 800 நபர்களுக்கு அடையாள அட்டைகளையும், 96 பயனாளிகளுக்கு ரூ.10,22,760 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் திருமதி வ. கலையரசி தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி முன்னிலையில் வழங்கினார்கள்.

இதில் ஆ.இராசா. எம்.பி., தெரிவித்ததாவது:

சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். சாதியால் கல்விதான் அனைவரையும் உயர்த்தும். நான் எனது பெற்றோருக்கு 8 வது மகன். சிறிய குக்கிராமத்தில் விவசாய குடும்பத்தில் பிறந்த நான், கல்வியால், அம்பேத்கரால், தந்தை பெரியாரால், பேரறிஞர் அண்ணாவால், முத்தமிழ் அறிஞர் கலைஞரால் பாராளுமன்ற உறுப்பினராக, ஒன்றிய அரசின் அமைச்சராகவும் இருந்திருக்கின்றேன் என்றால் அது நான் படித்த கல்வியால் தான். இந்தக் கல்வியை இந்த சமூகம் இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை.

உங்கள் குடும்பத்திலிருந்து எத்தனை பேர் அரசு அலுவலர்களாக, மாவட்ட ஆட்சித்தலைவர்களாக, மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களாக உள்ளார்கள் என்பதை சிந்தியுங்கள். சாதி ஒழிய வேண்டும், எல்லோருக்கும் கல்வி வேண்டும், எல்லோருக்கும் வேலை வாய்ப்பு வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்லியிருக்கின்றார். அருள்கூர்ந்து உங்கள் பிள்ளைகளை படிக்க வையுங்கள். கல்விதான், அதிகாரம் தான் உங்கள் குழந்தைகளைக் காப்பாற்றும். ஒரு காலத்தில் அறிவுமட்டும் தான் இந்த உலகத்தை ஆட்சி செய்யும் அதை நோக்கி உங்கள் பயணத்தை வைத்துக்கொள்ளுங்கள். அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை நோக்கிதான் திராவிட மாடல் ஆட்சி வழங்கி வருகின்றது. அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இதற்கு வழிவகுத்தார். இன்று அவர்கள் யாரும் உயிரோடு இல்லை. அவர்களின் ஒட்டுமொத்த வடிவமாக திகழ்பவர்தான் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சீர்மரபினர் நல வாரியத்தில் 1 லட்சம் உறுப்பினர்களை சேர்க்கும் பணியில் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளோம். தற்போது வரை சுமார் 97,000 உறுப்பினர்களை சேர்த்துள்ளோம். அதில் இன்று பெரம்பலூர் மாவட்டத்தில் சீர்மரபினர் நல வாரியத்தில் இன்று 800 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றது. இன்னும் 6 மாதங்களில் ஒரு லட்சம் உறுப்பினர்களை எட்டும் வகையில் எங்கள் பணி இருக்கும்.

கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் ஊராளிக் கவுண்டர்கள் உள்ளார்கள். ஊராளிக்கவுண்டர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து சீர்மரபினராக மாற்றுவதற்கான பெரும் முயற்சி எடுத்தவர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள்தான். இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தி, அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசின் திட்டங்கள் சென்று சேரும் வகையில் நாளுக்கொரு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகின்றார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னர் முதலமைச்சர் அவர்கள் "அன்புக்கரங்கள்" என்ற திட்டத்தை தொடங்கினார்கள். பெற்றோரை இழந்த குழந்தைகளின் கல்வி மேம்பட மாதம் ரூ.2000 வழங்கும் இந்த உயர்வான திட்டத்தால் எத்தனை குழந்தைகள் பயன் பெறுவார்கள் என நீங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இப்படி ஒரு முதலமைச்சரை பெற்றதற்கு நாம் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டும்.

சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர்கள் அரசு நலத் திட்டங்களுக்கு ஆன்லைன் மூலமாக பதிவு செய்யும் வசதி வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றது. விரைவில் முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர், சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர்கள் 800 நபர்களுக்கு அடையாள அட்டைகளையும், 96 பயனாளிகளுக்கு ரூ.10,22,760 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் ஆ.இராசா.எம்.பி., பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அவர்களும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆதர்ஷ் பசேரா, மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், சிறுபான்மையினர் நல வாரிய துணைத் தலைவர் இராசாஅருண்மொழி, உறுப்பினர் செ.கணேசன், மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் (பொ) வி.வாசுதேவன், நிர்வாக அலுவலர் பா.குணசேகர் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாய அணியின் திருப்பூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - **பி. ஈஸ்வரன்,** 15/72, செம்மே கவுண்டன்பாளையம், சடையபாளையம் அஞ்சல், குண்டடம் - 638702, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - கா. செல்லமுத்து ஆபீஸ் தோட்டம், குப்புச்சிபாளையம், தாராபுரம் - 638657, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - ஆர்.ஜி. முத்துக்குமார் 3, மாரியம்மன் கோவில் வீதி, ருத்ராவதி, குண்டடம் - 638702, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. ஈஸ்வரன் 5/89, மொசுகுத்திவலசு, மறவபாளையம் அஞ்சல், சென்னிமலை வழி - 638051, காங்கேயம், திருப்பூர் மாவட்டம். 2) என். சாமிநாதன் 6-35, புதுவலசு, சாணார்பாளையம், சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம். 3) எல்.பி. பழனிச்சாமி 143, சேரன்குட்டை தோட்டம், இலக்கும நாயக்கன்பட்டி அஞ்சல், வெள்ளகோவில் - 638111, திருப்பூர் மாவட்டம். 4) டி. நாகராஜ் 6/14, பழையாண்டிபாளையம் புதூர், வீரணம்பாளையம் அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 5) எம். செல்வராங்குமுருகன் அரிக்காரன் வலசு அஞ்சல், அரவக்குறிச்சி வழி - 639201, தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம். 6) மில்கா ஆர்.எம். கந்தசாமி மில்கா ஆயில் மில், இராமபட்டிணம், சிவன்மலை அஞ்சல், காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 7) கே. சுப்பிரமணியம் பாலா கார்டன் சேரன் நகர், வெள்ளகோவில் - 638111, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி



துணை முதலமைச்சர் அவர்கள் 16.09.2025 அன்று சேலம், கருப்பூர், அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு சுமார் ரூ.3,500 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, கற்பக விநாயகா மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் கலந்துகொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளுக்கான காசோலைகளை வழங்கினார். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வகோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ஊ.பாலசுந்தரம், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் கே.செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தந்தை பெரியார் அவர்களின் 147வது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற உறுதிமொழியேற்பு நிகழ்ச்சியில் சமூக நீதி நாள் உறுதிமொழியினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வாசிக்க அனைத்துத் துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.